# NGM COLLEGE

(AUTONOMOUS)

Re-Accredited with 'A' Grade by NAAC

An ISO 9001 : 2015 Certified Institution

POLLACHI - 642 001

# உழவு பாரதம்

(சான்றிதழ் பாடத்திட்டம்)

(Certificate Course)

இரண்டாம் தாள்


## உழவர் ஏற்றமே உழவின் மேன்மை

மூன்றாம் தாள்

## மாசற்ற சூழலும் வேளாண் வளர்ச்சியும்



*Empower the Youth to Enrich the Nation*



# வேளாண் மீட்சி பற்றிய சிந்தனைகள்

- இந்தியா வேறு இந்திய வேளாண்மை வேறு அல்ல
- முதியவர்களான கடைசித் தலைமுறையினரின் கடுமையான உழைப்பால் மட்டுமே இப்போது விவசாயம் உயிர் பிழைத்துக் கொண்டிருக்கிறது
- தேக்கம் இன்றி ஆக்கம் தரும் கொள்கைகளே உண்மையான நாட்டுச் செல்வத்தை உருவாக்குகின்ற உழவன் வாழ்வில் மகிழ்ச்சியைக் கொண்டு வரும்
- காந்திஜி கனவு கண்ட இராமராஜ்ஜியத்தால் தான் பலம் வாய்ந்த பாரதத்தை உருவாக்க முடியும். அதற்காக தன்னாட்சி மிளிரும் கிராம அமைப்பை உருவாக்க வேண்டும்
- விவசாயமும் விவசாயப் படிப்பும் அந்நியமாகவே இருக்கின்றன. இவற்றை அருகருகே கொண்டு வர வேண்டும்.
- விவசாயப் பட்டதாரிகளின் உத்தியோகம் குடியானவர்களோடு தொடர்புடையதால் அவர்களின் மொழியிலேயே விவசாயப் பல்கலைக்கழகங்கள் விவசாயத்தைக் கற்றுத் தர வேண்டும்.
- விவசாயிகளுக்கு நம்பிக்கையூட்டி சரியான வழி எது என செயலில் காட்டி உற்பத்தியை அமோகமாகச்செய்யத் தூண்டுகின்ற விவசாய நிர்வாகிகளை வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கித் தர வேண்டும்.
- இரசாயன உரங்களால் நீர்த்துப்போன பூமியைக் கைவிடாமல் அவற்றின் சத்துக்களைப் பெருக்க வழிமுறைகளை விவசாய விஞ்ஞானிகள் எடுத்துக்கூற வேண்டும்.
- நிரந்தர பாசன வசதிக்கு நதி நீர் இணைப்பைச் செயல்படுத்த வேண்டும்
- குழாய்க் கிணறுகளின் ஆழத்தின் அளவை சட்டப்படி கட்டுப்படுத்தி நிலத்தடி நீரைப் பாதுகாக்க வேண்டும்.
- விவசாயத்திற்கு அனைத்திந்தியச் சந்தையை உருவாக்கி விவசாயத்தை வருமானம் தரும் தொழிலாக உருவாக்க வேண்டும்.
- நவீன இயந்திரங்களின் மூலம் கிராமப்புறக்கைவினைத் தொழிலுக்கு மறுமலர்ச்சி தர வேண்டும்.
- விவசாய விளை பொருள்களைப் பதப்படுத்தும் துறையை மேம்படுத்தி கிராம வேலைவாய்ப்பைப் பெருக்க வேண்டும்.
- இந்திய விவசாயத்தை நலிவடையச் செய்யக் கூடிய முயற்சி எதிலும் யாரும் ஈடுபடக் கூடாது என்பதே எனது வேண்டுகோள்.

**– அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம்**

# உழவு பாரதம்

## சான்றிதழ் பாடத்திட்டம்
## (Certificate Course)

## உழவர் ஏற்றமே உழவின் மேன்மை

### இரண்டாம் தாள்

பதிப்பு

**நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி**

(தன்னாட்சி, தேசிய மீள்தர மதிப்பீடு, ஏ தகுதி,
ஐ.எஸ்.ஓ.9001-2015 தரச்சான்றிதழ் பெற்றது)
பொள்ளாச்சி - 642 001

பாடநூல்

# உழவர் ஏற்றமே உழவின் மேன்மை

மற்றும்

# மாசற்ற சூழலும் வேளாண் வளர்ச்சியும்

பதிப்பு : முதற்பதிப்பு - 2019
வெளியீடு : என்.ஜி.எம் கல்லூரி
பதிப்பகம் : ருக்மணி பதிப்பகம், கோவை
**ISBN No. : 978-93-87009-15-8**

## ஆலோசனைக் குழு

**டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்**
தலைவர், என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி

முனைவர் க.பழனிச்சாமி
விஞ்ஞானி, பன்னாட்டு நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிறுவனம், பூசா, புதுடெல்லி.

பொறியாளர் இளங்கோவன் (ஓய்வு)
பொதுப்பணித்துறை நீர்ஆதாரங்கள் பிரிவு,
பரம்பிக்குளம், ஆழியார் வடிநில வட்டம், பொள்ளாச்சி

## நூல் ஆக்கக் குழு

**தலைவர்**
**முனைவர் பொ.மா.பழனிசாமி,** முதல்வர்

ஆசிரியர்
முனைவர் ப.கிருஷ்ணதுளசிமணி, தலைவர், பொருளாதாரத் துறை

கௌரவ ஆசிரியர்கள்

முனைவர் சு.செல்வக்குமார்
உதவிப் பேராசிரியர்
முதுகலைத் தமிழ்த்துறை

முனைவர் க.பூங்கொடி
தலைவர்
முதுநிலை வேதியியல்துறை

என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி

# பொருளடக்கம்

அணிந்துரை
வாழ்த்துரை
நுழைவாயில்

1. இயந்திரம் ஒரு மந்திரம்
*முனைவர் சா.ஜனப்பிரியா* ..... 1

2. செல்வம் பெருக்கும் மதிப்புக் கூட்டல்
*Er.மதுராமகிருஷ்ணன்* ..... 7

3. மண்புழுவும் மண்வளமும்
*Er.மதுராமகிருஷ்ணன்* ..... 13

4. சிறுதானிய உற்பத்தி ஆரோக்கிய விருத்தி
*முனைவர் எம்.வி.சத்தியபாமா* ..... 18

5. மூலிகை வளர்ப்பு - வறுமை தவிர்ப்பு
*முனைவர் ப.வடிவேல்* ..... 21

6. நம்மூர் வேளாண்மை நமக்குச் சொல்லும் பாடம்
*முனைவர் நிர்மலா சதீஸ்* ..... 26

7. உழவர் வடிவில் புதிய விடியல்
*முனைவர் க.பூங்கொடி* ..... 32

8. உழவனே உனக்கான நேரமிது, உரிமையை மீட்டு எடு
*முனைவர் சு.செல்வக்குமார்* ..... 38

9. அரசின் பார்வைக்கு
*Er.இளங்கோவன்* ..... 44

10. மண்ணின் மைந்தனாகிய நான்.....

11. பாடத்திட்டம்

12. மாதிரி வினாத்தாள்

# 6. நம்மூர் வேளாண்மை நமக்குச் சொல்லும் பாடம்

**முனைவர் நிர்மலா சதீஷ்**
உதவிப்பேராசிரியர்,
பொருளாதாரத் துறை,
என்.ஜி.எம். கல்லூரி.

தமிழகத்தின் இரண்டாவது பெரிய மாவட்டமான கோவை மாவட்டத்தில் 3000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே விவசாயம், ஆடு, மாடுகள் மேய்த்தல் போன்ற தொழில்கள் பல சிரமங்களுக்கிடையேயும் சிறப்போடு செய்யப்பட்டு வந்தன; வருகின்றன.

முன்னோர்கள் காட்டுவளம் மிகுந்த இப்பகுதியில் கி.பி பத்தாம் நூற்றாண்டிலேயே "காடு கொன்று நாடாக்கும் பணி" மூலம் நிலங்களை உருவாக்கி வேளாண்மையை மேற்கொண்டனர். இத்தொழிலை விரிவாக்கம் செய்வதற்காக வரிச்சலுகைகளும் அளிக்கப்பட்டன.

பழங்குடியினர் வாழ்விடப் பகுதிகளிலும் நீர்ப்பாசன வசதிகள் செய்து இப்பழங்குடியினரையும் வேளாண்மையில் ஈடுபடுத்திச் சமூக நீரோட்டத்தில் இணைத்தனர். பின்னாளில் வேளாண்மை நிலங்களில் குடியிருப்புக்கள் தோன்றி அவை பொழில் வாய்ச்சி (பொள்ளாச்சி) தெருப்பெரிச்சல், புற்றெரிச்சல், செலக்கரிச்சல் உள்ளிட்ட ஊர்களாக வளர்ச்சி பெற்றன.

மலைகளும் குன்றுகளும் நிறைந்த குறிஞ்சி நிலமாகவும் காடும் காடு சார்ந்த முல்லை நிலமாகவும் அமைந்த இப்பகுதி நன்செய், புன்செய், தோட்டம், மலை, காடு, தோப்பு, நத்தம், பட்டி, குடியிருப்புக்கள் எனப் பிரிக்கப்பட்டிருந்தது. இப்பகுதி மக்கள் மழை நீரைத் தேக்கி வைக்கும் நில அமைப்புகளுக்குக் குளம் அல்லது ஏரி என்றும், அதில் சிறிய அளவுள்ள பகுதியைக் குட்டை என்றும் பெயரிட்டுப் பயன்படுத்தினர்.

கொங்குச் சோழர்கள், வீரகேரளர்கள், பாண்டியர்கள் முதலியோர் குளங்கள், கால்வாய்கள், அணைகள், கிணறுகள் மூலம் நீர்ப்பாசன வசதியை இப்பகுதியில் விரிவுபடுத்தினர்.

நொய்யலாற்றின் குறுக்கே 32 அணைகளைக் கரிகாலனும், பவானி ஆற்றின் குறுக்கே வீரபாண்டியனின் அமைச்சர் காலிங்கராயனும், அக்கரைக் கொடுவேல் என்ற இடத்தில் பவானிக்கு குறுக்கே உம்மத்தூர் உடையார்களும் அணைகள் கட்டியுள்ளனர். நொய்யலின் குறுக்கே கோட்டூர் அணை, தேவி சிறை அணை, சூலூர் அணை மற்றும் நொய்யலாறும் நல்லாறும் கூடுமிடத்தில் ஒரு அணை எனப் பல அணைகள் கட்டப்பட்டிருந்ததாகக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. வெப்ப மண்டத்தில் அமைந்த இந்தக் கொங்குப் பகுதியில் வறட்சியைச் சமாளித்து வேளாண்மையை விரிவுபடுத்துவதற்காகவே மேற்கூறிய அணைகள் கட்டப்பட்டதாகப் பார்க்கிறோம்.

வேளாண்மையைக் கரைவழிப்பயிர், காட்டுப்பயிர், தோட்டப்பயிர் என மூன்று வகையாகப் பிரிப்பர். நிலத்தில் உழவுத் தொழில் செய்த மக்கள் 'உழவுக்குடிகள்'

என்றும், கைவினைப் பொருட்களைத் தயார் செய்து கொடுத்த மக்கள் '*கைவினைக் குடிகள்*' என்றும் வணிகர் முதலியோர் '*காசாயக் குடிகள்*' என்றும் அழைக்கப்பட்டனர்.

இங்கு 1792 முதல் 1800 வரை கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சியும் அதன்பின் 90 ஆண்டுகள் ஆங்கில மகாராணியின் ஆட்சியும் நடைபெற்றன. இங்குள்ள நிலங்கள் அவர்களால் அளவிடப்பட்டு, வகைப்படுத்தப்பட்டு, நிலவரி விதிப்புக்கு உள்ளாக்கப்பட்டன. ஆங்கிலேய ஆட்சியாளர்களான தாமஸ் மன்றோ, கர்னல் ரீடு போன்றோர் ரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்தினர். இதன் மூலம் வரி வசூலிக்கப்பட்டது. ஆனால் அவர்களது ஆட்சிக் காலத்தில் வேளாண்மைக்காக எந்தவொரு நலத்திட்டமும் இங்கு அறிமுகப்படுத்தப்படவில்லை. இருப்பினும் பருவ மழைக்கேற்ப உழவு உத்திகளை வகுத்துக் கொண்டு நேரடியாக நில உரிமையாளர்களே உற்பத்தியில் ஈடுபட்டதால் தங்களின் பொருளாதார நலன் குன்றாமல் வாழ்ந்தார்கள்.

பண்டைக் காலத்தில் வணிகத்திலும் இடைக்காலத்தில் வேளாண்மையிலும் வளர்ச்சி பெற்ற நமது கோவை மாவட்டம் இன்று வரை தமிழகப் பொருளாதாரத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக வளம்பெற்று வருகிறது.

## இன்றைய கோவை

தமிழகத்தின் மேற்குத் தட்பவெப்ப மண்டலத்தில் நமது கோவை மாவட்டம் அமைந்துள்ளது. இங்கு 17.29 இலட்சம் ஆண்கள் மற்றும் 17.28 இலட்சம் பெண்கள் என 34. 5 இலட்ச மக்கள் வசிக்கின்றார்கள். பெரும்பாலான மக்கள் (76.2%) கல்வியறிவு பெற்றவர்களாக, உழைப்பாளர்களாக இருக்கின்றனர். 4.8 சதவீத விவசாயிகளும் 12.8 சதவீத வேளாண் உழைப்பாளர்களும் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொழில் துறை, கட்டுமானத்துறை, பணித்துறை போன்றவைதான் மாவட்ட வருமானத்தின் பெரும்பங்கைத் தருகின்றன. இங்கு நகர்ப்புற மக்களின் சராசரி வருமானத்தைவிட கிராமப்புற மக்கள் குறைவான வருமானத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் கொண்டுள்ளனர். வறுமைக் கோட்டிற்குக் கீழே வசிக்கும் மக்களின் அளவு மாநில சராசரி அளவை விடக் குறைவு என்பது சிறப்பான நிலையாகும்.

## வேளாண் நிலம்

இங்கு 1.77 இலட்சம் ஹெக்டேர் சாகுபடி நிலங்கள் உள்ளன. அதில் 1.73 இலட்சம் ஹெக்டேர் நிலங்களே உழவுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. வருடத்தில் ஒரு முறைக்கு மேல் சாகுபடி செய்யப்படும் நிலங்களின் பரப்பளவு 2.1 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது. 45.4 சதவீத விவசாயிகள் இரண்டு ஹெக்டேருக்குக் குறைவான நிலத்தில்தான் சாகுபடி செய்து வருகின்றனர். சராசரியான நிலத்தின் அளவு 1.81 ஹெக்டேர் மட்டுமே.

பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்ற நிலத்தின் அளவானது, மழையின் அளவு, மண்ணின் தன்மை, விவசாயிகளின் வசதி வாய்ப்புக்கள், நுகர்வோரின் தேவை, அரசின் திட்டங்கள் ஆகியவற்றைப் பொருத்து மாற்றத்திற்குட்பட்டதாகவே அமைந்துள்ளது.

மிக அடர்த்தியான காடுகளைக் கொண்டுள்ள மிகச்சில மாவட்டங்களுள் கோவையும் ஒன்று. இங்கு 20 சதவீத காடுகள் அமைந்திருப்பது மகிழ்வுக்குரியதாகும். இதில் தேக்கு, சந்தனம், ஈட்டி, மூங்கில் போன்ற வியாபாரம் முக்கியத்துவம் வாய்ந்த மரங்கள் மிகுந்துள்ளன. சில டீ மற்றும் காப்பித் தோட்டங்களும் இங்கு அமைந்துள்ளன.

**நீர் வளம்**

இம்மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்வது ஒரு சிறப்பம்சமாகப் பார்க்கப்படுகிறது. இப்பகுதி சராசரியாக வருடத்திற்கு 600 மி.மீ மழைப் பொழிவைப் பெறுகிறது. இதில் குறிப்பாக வடகிழக்குப் பருவமழை 444.3 மி.மீ அளவு மழை நீரைத் தருகிறது.

ஆழியாறு, நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம், நொய்யல், பவானி ஆறுகளும் ஆழியார் அணை, பரம்பிக்குளம் அணை, தூணக்கடவு அணை, பெருவாரிப்பள்ளம் அணை, சோலையார் அணை, கீழ் நீராறு அணை, மேல் நீராறு அணை ஆகியனவும் பாசன வசதிக்குத் துணை நிற்கின்றன.

கோவை தெற்கு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, சூலூர், மதுக்கரை மற்றும் பேரூர் ஆகிய நகராட்சிகளில் 271 கி.மீ நீளத்தை உள்ளடக்கிய 37 கால்வாய்கள் உள்ளன. 71 ஆயிரம் கிணறுகள், 7 ஏரிகள் மற்றும் 48 குளங்கள் என மேற்கூறிய அனைத்து நீராதாரங்களும் இணைந்து 55 சதவீத நிலத்திற்கு மட்டுமே பாசன வசதியைத் தந்து கொண்டுள்ளன. எஞ்சியுள்ள நிலங்கள் வானம் பார்த்த நிலங்களாகவே காட்சியளிக்கின்றன.

**வேளாண் உற்பத்தி**

மண்ணின் உற்பத்தியாற்றல் வெள்ளலூர், ஆனைமலை போன்ற பகுதிகளில் சிறப்பாகவும், பாலத்துறை, நொய்யல், பீளமேடு, பெரிய நாயக்கன் பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் சராசரியாகவும், இருகூர், பல்லடம், ஒக்கிலிபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் மிகக்குறைவாகவும் உள்ளது.

தேங்காய் முக்கியப் பயிராகவும் அதைத் தொடர்ந்து சோளம், வாழை, நிலக்கடலை, மா, நெல் போன்றவையும் பயிரிடப்படுகின்றன. பால் மற்றும் அது சார்ந்த பிற பொருட்கள் உற்பத்திக்கு ஏதுவாக 4 பால் பதப்படுத்தும் நிலையங்களும், 327 பால் கூட்டுறவுச் சங்கங்களும் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பல்லடம், மடத்துக்குளம், குடிமங்கலம், கிணத்துக்கடவு மற்றும் பொங்கலூர் பகுதிகளில் கறிக்கோழி வளர்ப்பும் முட்டை உற்பத்தியும் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவசாய உற்பத்திப் பொருட்களை இருப்பு வைத்துபின் சந்தைப்படுத்துவதற்காக பெரிய அளவில் 4 குளிர்சாதனக் கிடங்குகள் குறிப்பாக மஞ்சள் மற்றும் மிளகாய் போன்றவற்றைப் பாதுகாக்க உருவாக்கப்பட்டுள்ளன. உருளைக்கிழங்கு மற்றும் காய்கறிகளைச் சேமிக்க மேட்டுப்பாளையத்தில் ஒரு குளிர்சாதனக் கிடங்கு உள்ளது. 18 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும் 9 உழவர் சந்தைகளும் பொருள்

விற்பனைக்குப் பேருதவியாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இங்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் 45 சதவீத மக்களுக்கு வேளாண்மை வாழ்வாதாரமாக உள்ளது. இனி நமது மாவட்டத்தில் வேளாண்மைத்துறை சந்திக்கும் பிரச்சினைகளையும், தீர்வுகளையும், வாய்ப்புகளையும் சிந்திப்போம்.

**.நாம் எதிர்கொள்ளும் சவால்கள்**

- பெரும்பாலான பகுதிகளில் 100 சதவீத அளவில் நிலத்தடி நீர் இழப்பு.
- போதிய அளவில் நீர்ப்பாசன வசதியின்மை.
- தொழிற்சாலைக் கழிவுகளால் மாசடையும் நீர் நிலைகள்.
- வறட்சிக் காலங்களில் தரிசு நிலங்கள் அதிகரிப்பு.
- இருகூர் மற்றும் பல்லடம் பகுதிகளில் 50 சதவீதத்திற்கும் மேலான நிலங்களில் மிகவும் குறைவான உற்பத்தித்திறன்.
- தரமான விதைகள் பற்றாக்குறை.
- அதிக தீவனச் செலவு.
- நிலையற்ற முட்டை மற்றும் தேங்காய் விலை.
- சிதறுண்டு கிடக்கும் விவசாய நிலங்கள்
- குறைவான இயந்திரப் பயன்பாடு.
- வேளாண் உழைப்பாளர்கள் பற்றாக்குறை.
- விவசாய நிலம் சுருங்குதல்.
- வெளிநாட்டு, வெளிமாநில குப்பைகளால் நிலம் மாசடைதல்.
- அதிக மணல் எடுப்பு நீராதாரங்களைப் பாதித்தல்.
- வேளாண் துறையில் விவசாயிகளின் ஆர்வம் குறைந்து வருதல்.

**சவால்களுக்கான தீர்வுகள்**

- மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைத் தீவிரப்படுத்துதல்.
- சொட்டுநீர்ப் பாசனம் உள்ளிட்ட நீர் மேலாண்மையைக் கடைப்பிடித்தல். இதுசார்ந்த அரசு மானியத்தைப் பயன்படுத்த ஊக்குவித்தல்.
- மண்ணிற்கேற்ற சாகுபடி நீர்மேலாண்மைக்கு உதவும் என்பதால் அதைப் பின்பற்ற அறிவுறுத்தல்.
- நீராதாரங்களை முறையாகத் தூர் வாருதல்.
- தொழிற்சாலைக் கழிவுகளைச் சரியான முறையில் அப்புறப்படுத்தல்.
- வெளிமாநில, வெளிநாட்டுக் குப்பைகளைத் தடை செய்ய தகுந்த நடவடிக்கை எடுத்தல்.
- மணல் மற்றும் மண் கொள்ளையைத் தடுத்தல்.
- தரமான விதைகளை அரசு உற்பத்தி செய்வதோடு விவசாயிகளுக்கும் உற்பத்தி செய்ய வாய்ப்பும், வசதியும் அளித்தல்.
- பரவலாக விதை வங்கிகள் அமைக்கப்பட்டு அனைத்து விவசாயிகளுக்கும் தரமான விதை கிடைக்கச் செய்தல்.

- அரசின் புறம்போக்கு, தரிசு நிலங்களில் கால்நடைத் தீவன உற்பத்திக்கு ஆவன செய்தல்.
- சிதறுண்ட நிலங்களை ஒருங்கிணைத்துப் பண்ணையம் அமைக்கும் முறையை, அதன் பயன்பாட்டினை விவசாயிகள் உணரச் செய்தல்.
- மானியத்தோடு அரசு வழங்கும் இயந்திரம், சொட்டு நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் உள்ளிட்டவற்றை உழவர்களுக்குத் தெளிவுபடுத்துதல்.
- வட்டியில்லா நிதியுதவி செய்தல்.
- வேளாண் விலை பொருளுக்கு உழவர்களே விலையைத் தீர்மானிக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தித் தருதல்.
- வறட்சிக் காலங்களிலும் உழவர்கள் போதிய வருமானம் பெறும் வழிகளில் அவர்களை ஈடுபடுத்துதல்.
- அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் உழவர்கள் அறியவும் பயன் பெறவும் அரசு - உழவர் அரசுசாரா நிறுவனங்கள் இணைந்து பணியாற்றுதல் போன்றன சவால்களுக்கான தீர்வுகளாக அமையும்.

**விவசாயம் வளம் பெற வாய்ப்புக்கள்**

- தேங்காய் மற்றும் அது சார்ந்த தொழில்களில் முனைப்புக் காட்டுதல். இவற்றின் வளர்ச்சிக்கு அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் நிதி மற்றும் பணிகளை உபயோகித்தல்.
- வேளாண்மை சார்ந்த உற்பத்திப் பொருட்கள், கோழிப் பண்ணை, பால் பண்ணை ஆகியன இலாபகரமான தொழில்களாக இருப்பதால் இவற்றில் ஈடுபடவும், இவை சார்ந்த ஏற்றுமதிகளை ஊக்கப்படுத்தவும், அரசு மற்றும் நபார்டு வங்கி அளிக்கும் நிதியுதவிகளைப் பயன்படுத்தவும் வழிகாட்டுதல்.
- நவீன அரிசி ஆலை அமைத்தல்.
- சிறிய அளவில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி ஆலை அமைத்தல்.
- அடுமனைத் தொழில், சாஸ், ஊறுகாய் போன்றவற்றைத் தயாரித்தல்.
- அலங்கார மலர்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி செய்தல்.
- இளநீர், கரும்பு ஜீஸ் போன்றவற்றின் தேவை அதிகரித்துள்ளதால் இதன்பால் கவனம் செலுத்துதல்.
- கீரை சாகுபடி.
- மூலிகை சாகுபடி.
- மீன் வளர்ப்பு, இதன் மதிப்புக் கூட்ட மையம் போன்றவற்றை உருவாக்க அரசு வழங்கும் ஆலோசனை மற்றும் உதவியைப் பெறுதல்.

மேற்சொன்ன அனைத்துத் துறைகளிலும் அரசின் ஈடுபாடும் திட்ட உதவிகளும் சிறப்பாக அமைந்துள்ளதாலும் இவற்றிற்குப் பெரிய அளவு மக்களிடையே தேவையிருப்பதாலும் விவசாயிகளின் வருமானம் அதிகரிப்பதாலும் இவற்றில் இளைஞர்கள் கால்பதிப்பது வெற்றிபெறுவதற்கு ஏதுவாக அமையும்.

---

முடிவுரை

நம்ம ஊர் வேளாண்மை நிலைப்பாட்டையும் நாம் மேற்கொண்டு சமாளிக்க வேண்டிய சவால்களையும் சீர்தூக்கிப்பார்க்கின்ற பொழுது இவற்றைச் சரிப்படுத்துகின்ற நடவடிக்கையின்பால் நாம் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகின்றது.

சிந்தாமணிக் குளம், முத்தண்ணன் குளம், பணங்காட்டுக் குளம், புலியகுளம், அம்மன் குளம் உள்ளிட்ட 30 குளங்கள் இன்று காணாமல் போய்விட்டன. காடு, குளம், ஆறு, செழிப்பான மண் போன்ற வளங்களை நாம் போதுமான அளவு பெற்றிருந்தும் தவறான அணுகுமுறைகளுக்கு இவற்றை விலையாகக் கொடுத்துவிட்டு வேளாண் துறை சார்ந்த வளர்ச்சிகளைத் தொலைத்து விட்டோம்.

தென்னிந்திய மான்செஸ்டர், பஞ்சாலை நகர், தொழில் பூங்கா, கல்வி நிறுவனங்களின் மையம், ஓய்வறியா உழவர்களின் உழைப்பு, சான்றோர் வழி நிற்கும் பாங்கு, விருந்தோம்பலின் சிறப்பு, பண்பாட்டில் சிகரம் என நமது மாவட்டம் பெயர் பெற்றிருந்தாலும்,

"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்காடும்
மாந்தர் வாழ்விற்கு அரண்" (குறள் - 742)

என்று வள்ளுவர் கூறியதற்கேற்ப நம் வாழ்வின் அரண்களைப் போற்றிப் பாதுகாப்பதும் அவற்றை நிலைபெறச் செய்வதும் ஆகிய செயல்கள் மட்டுமே நமது வாழ்வை உறுதிப்படுத்தும், வளப்படுத்தும் என உணர்வோம்! செயல்படுவோம்!

*****

# சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
# உழந்தும் உழவே தலை


- திருக்குறள்

மானுடம் காக்க...
மண்ணும் நீரும் வளம் தரும் காடும் போற்றிக் காப்பேன் !
காற்றும் மழையும் கண்ணெனக் கொள்வேன்!
விளையும் மணியும் பொருளும் உயிரென மதிப்பேன் !
வளம் கெடா வாழ்வே சரியென நிற்பேன் !
புதியன பழையன யுக்திகள் யாவும்
நிலத்தைக் காக்கின் சம்மதம் சொல்வேன் !
சேற்றில் உழலும் உழைப்பே பெரிது !
வியர்வை சிந்தும் உழவனும் இமயம்
வளம் தரும் வாழ்வைப் படைத்திட இயலும் !
படித்ததை விதைப்பேன் !
விளைந்ததைப் பகிர்வேன் !
என் மண் என் கடமை இதுவென உணர்வேன் !
மண்ணின் மைந்தனென்பதை மறவேன் !
மானுடம் காக்க உழவை மீட்பேன் !
விண்ணும் மண்ணும் வாழ்த்தி நிலைக்க
பெற்ற புண்ணியம் இதுவென மகிழ்வேன் !

- இளைய பாரதம்








**NGM College**
90, Palghat Road, Pollachi - 642 001,
Coimbatore District, Tamilnadu, INDIA
Ph: 04259-234868, 234870 Fax: 04259 - 234869
E-mail: ngm@ngmc.org, www.ngmc.org


NAAC

TÜVRheinland CERT ISO 9001

Rukmani Offset Press, Cbe. ✆ 0422-2672789